1973 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தந்தக் கல்வித் துறைக்கு அவர்கள் விண்ணப்பித்தால், அந்தந்தக கல்வித் துறை அது குறித்து இன்னும் ஒதுக்கலாம். சர்வகலாசாலையில் அதிக இடம் ஒதுக்க சங்கடம் இருக்காது. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு அவர்கள் விண்ணப்பித்தால், அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப முடிவு எடுக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, தாயகம் திரும்பிய பர்மா, இலங்கை அகதிகளுக்கு இப்போது கல்லூரிகளில் அளிக்கப்படுகின்ற இடங்களை அதிகப்படுத்துவதோடு, அவர்களுக்குப் பணமாக உதவி செய்வதற்கும் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியில்லையென்றால், அதைச் செய்து தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எனனைப பொறுத்தவரையில், கல்வித் துறையில என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதுதான் தெரியும். அவர்களுக்குப் பொருளாதார வசதிகள், மற்ற மற்ற வசதிகள் எல்லாம் அதற்கென்று இருக்கும் துறைகளில் கவனிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் துறைகள் சில பல வசதிகளைச் செய்து தருகின்றன.

வேலம்பாளையத்திலுள்ள தனியார் பள்ளி.

*344 வினு:—திரு சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-ம் ஆண்டில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 15 வேலம்பாளையத்தில் உள்ள தனியார் பள்ளியை அரசு பள்ளியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் பணிகள்.

*345 வினு:—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 70-71, 71–72-ம் ஆண்டுகளில் மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் (R.M.P.) வேலை எதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கென எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? எந்த எந்த ஊராட்சி மன்றங்களில் வேலே மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை ([a]) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலேவரவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். எந்தெந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலேவரவர்களே. மொத்தத்தில் செலவழிக்கப்பட்ட தொகை 1970–71-ல் ரூ. 25,000, 1971–72-ல் ரூ. 40,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1970–71-ல் ரெங்க சமுத்திரம் சாலே சீரமைப்பு, குன்னூர் சாலே சீரமைப்பு, கிணற்றுக்கு கைப்பிடிச் சுவர் அமைத்தல், அம்மச்சியாபுரம் சாலே சீரமைப்பு, திரு மலாபுரம் சாலே சீரமைப்பு, டி. சுப்பலாபுரம் சாலே சீரமைப்பும், கிணற் றுக்கு கைப்பிடிச் சுவர் அமைத்தல், அனுப்பப்பட்டி சாலே சீரமைப்பு, ராஜகோபாலன்பட்டி சாலே சீரமைப்பு, கோத்தநூத்து சாலே சீரமைப்பு, திம்மராச நாய்க்கனூர் சாலேச் சீரமைப்பு, கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் அமைத்தல், இராசதானி சாலே சீரமைப்பு எடுத்துக்கொள்ளப் பட்டன. 1971–72-ல் கோத்தநூத்து, நரசிங்காபுரம், ராஜகோபாலன்பட்டி ஆகிய இடங்களில் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் அமைத்தலும், ஜி. உசிலம்பட்டியில் அணைக்கட்டு சீரமைத்தலும், கன்னியப் பிள்ளேப்பட்டியில் சாலேக்கு வரப்பு அமைத்தலும், பிச்சம்பட்டி, ரெங்கசமுத்திரம், திருமலா புரம், அம்மச்சியாபுரம் போன்ற இடங்களில் தடுப்புச் சுவர் அமைத்தலும், புலமான்கொம்பை, மயிலாடும் பாறை போன்ற இடங்களில் சாலேகளே அமைத்தலும், சித்தார்பட்டியில் ஊரணி அமைத்தலும் ஆகிய வேலேகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

திரு. கு. பெரியசாமி : தலேவரவர்களே, இந்த ரூரல் மேன்-பவர் ப்ரோக்ராம் கீழ் சில ஊர் மன்றங்கள் ஆராய்ந்து வருகின்றன. 1970–71 1971–1972 ஆகிய ஆண்டுகளில் இதனுல் ஆதாயம் பெருத சில மன்றங்களுக்கு இந்த ஆண்டில் அந்தத் திட்டத்தில் ஈடுபட்டு செயல்பட ரூ. $1\frac{1}{2}$ லட்சத்தை வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆராய்ந்து முடித்து மாவட்ட ஆட்சித் தலேவர் சிபார்சு செய்கிருர். ஏற்கனவே நிறைவேற்றப்பட்டவைகளே நீக்கிவிட்டு, புதிதாக நடை பெறவேண்டிய பணிகளே, அதிலே மிகவும் முக்கியமாக உள்ள பணிகளே மாவட்ட ஆட்சித் தலேவர் சிபார்சு செய்கிருர். அந்த சிபார்சின் அடிப்படை யில் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1971–72-ல் மொத்தம் ரூ. 50 லட்சம் அந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(a) III-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 13]

திரு. ஆ. பரந்தாமன் : துணைத் தலைவரவர்களே, இந்த "ரூரல் மான்-பவர்" திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்குகின்ற பணம் உரிய காலத்தில் ஒதுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மூன்று மாதங்கள் அல்லது 4 மாதங்கள் தாமதமாகக்கிடைப்பதால் அந்த நாட்களில் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அந்தப் பணத்தை உரிய காலத்தில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த "ரூரல் மான்-பவர்" திட்டத்திற்கு மத்திய அரசு பணம் ஒதுக்குகிறதா இல்லையா என்பது தெரியவில்லை. தீவிர வேலைத் திட்டத்திற்குத்தான் மத்திய அரசு பணம் தருகிறது. தீவிர வேலைத் திட்டம் வேறு; ரூரல் மான்-பவர் திட்டம் வேறு. இந்தத் திட்டத்திற்காக சென்ற ஆண்டு நம்முடைய அரசு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் பணத்தை, சில ஒன்றியங்களால் முழுத் தொகையும் பயன்படுத்தப்படாமல் அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்துவதாகத் தெரிகிறது. இந்தத் தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விபரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எதனால் திருப்பி அனுப்பப்படுகிறது என்பதற்கான விபரத்தைத் திரட்டிக் கொடுக்க வசதியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ரூரல் மான்-பவர் ஸ்கீம் எத்தனை ஆண்டுகளாக நமது மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விபரக் குறிப்பு தற்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, மனித சக்தித் திட்டத்தின் கீழ் என்னென்ன வேலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு வரையறை விதித்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்தின் கீழ் சாலைகளைச் சீரமைத்தல், சிறு பாசன வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.